# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
ஆனி 8
றஜபு பிறை 4
ஞாயிறு (22-6-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 7
தொலைபேசி: 23411
விலை சதம் 35


## "சமாதான வழிகளில் 'தமிழ்ஈழம்' நிறுவமுடியாவிடின்

# வெளிநாடுகளின் உதவியை நாடவும் தயங்கோம்!

## வெளிநாட்டு செய்தி நிருபர்கள் மத்தியில் தலைவர் அமிர் பேச்சு!

**"அஹிம்சை வழியில் - சமாதானமாக எங்கள் தமிழ் ஈழத்தை அமைத்துக்கொள்ளவே விரும்புகிறோம். தமிழ்பேசும் மக்களின் இதய வேட்கையைப் புரிந்துகொண்டு சிங்கள அரசு இதற்கு இணங்கிவருமானால்-இரத்தம் சிந்தாமல் இரு இனங்களும் இத்தீவில் சுதந்திரமாக வாழ வழி ஏற்படும். சமாதானமுறைகள் தோல்வியுறுமானால், உலகிலுள்ள ஏனைய விடுதலை இயக்கங்களைப்போலவே, நாமும் நமக்கு உதவக்கூடிய வெளிநாடுகளிடமிருந்து உதவிபெற்று தீவிரமாகப் போராடி எங்கள் சுதந்திரத்தை எப்படியும் நிலைநாட்டியே தீருவோம்!"**



—மேற்கண்டவாறு வெளிநாட்டு செய்தி நிருபர்கள் மாநாட்டில் உரைநிகழ்த்திய தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் வெளிநாட்டு செய்தி நிருபர்களை 17-6-77 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலுள்ள ஹோட்டல் தப்ரபேனில் சந்தித்துப் பேசினர். இச்சந்திப்பை கொழும்பிலுள்ள வெளிநாட்டு செய்தி நிருபர்கள் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. மேற்படி சங்கத் தலைவரும், டைம்ஸ் குறூப் பத்திரிகையின் பிரதம ஆசிரியருமான திரு. மேர்வின் டீ சில்வா இக்கூட்டத்திற்கு தலைமைதாங்கினர். திரு. அமிர்தலிங்கம், சுமார் 120 நிமிட நேரம் அங்கு உரையாற்றியதுடன், நிருபர்களால் கேட்கப்பட்ட அத்தனை கேள்விகளுக்கும் விளக்கமாக பதிலளித்தார். இந்தச் சந்திப்பின்போது, சோவியத் செய்தி ஸ்தாபனமாகிய 'டாஸ்' நிருபரும் பிரசன்னமாகியிருந்தார்.

திரு. மேர்வின் சில்வா தனது தலைமை உரையில், திரு. அமிர்தலிங்கம் அவர்களை அறிமுகப்படுத்தும் போது பின்வருமாறு கூறினார்:—

"தமிழ் சமுதாயம் அடுத்தடுத்து மிகப்பெரிய பேரிழப்புக்களை சமீப நாட்களில் சந்தித்து விட்டது, திருச்செல்வம், ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோரின்மறைவையடுத்து திரு. செல்வநாயகமும் மறைந்தது தமிழர்களுக்கும் நாட்டுக்கும் பேரிழப்பாகும். ஆயினும் மேற்கண்ட அனுபவமிக்க பெருந்தலைவர்களோடு உடனிருந்து பணியாற்றிய திரு. அமிர்தலிங்கம், இப்போது தமிழினத்தின் தலைமைப்பீடத்தை அலங்கரிக்கிறார். திரு. அமிர்தலிங்கம் நீண்டகாலமாக இலங்கை அரசியலில் பணியாற்றி வருபவர். பழுத்த அரசியல் அனுபவம் நிறைந்தவர் என்று குறிப்பிட்டார்.

திரு. அமிர்தலிங்கம், தமது பேச்சின் தொடக்கத்தில்—திருச்செல்வம், ஜீ.ஜீ, தந்தை செல்வா ஆகிய பெருந்தலைவர்கள் வகித்த இடத்தை தம்மால் நிரப்ப முடியாதென்றும், அவர்களுக்கும் தமக்குமிடையே ஏறத்தாழ 30 ஆண்டுகள் வயதில் வித்தியாசமுண்டு என்றும், எனினும் காலம் விடுத்துள்ள சவாலை ஏற்று தமிழ் சமுதாயத்துக்கு தன்னாலியன்ற

—4-ம் பக்கம் பார்க்க

## நவத்தை நோக்கி கேள்விக் கணைகள்!

கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று (19-6-77) கருத்தரங்கு நடத்திய சுயாட்சித்தலைவர் திரு. வி. நவரத்தினத்தை நோக்கிசரமாரியாகதொடுக்கப்பட்ட இளைஞர்களின் கேள்விகளுக்கு தகுந்த பதிலளிக்கமுடியாமல் திக்கித்திணறிப்போனார் நவரத்தினம். கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றத்தைச் சேர்ந்த இளைஞர்களும் புங்குடுதீவு இளைஞர்முன்னேற்ற மன்ற இளைஞர்களும் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கமுடியாமல் வெலவெலத்துப் போனாராம் நவரத்தினம். இறுதியில் கேள்விகேட்டவர்கள் கூட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்களாம் அத்துடன் கூட்டமும் புஸ்வாணமாகிவிட்டது.

## கூட்டணி இளைஞர்கள் மீது குருநகர் பொலிசார் தாக்குதல்!

யாழ் குருநகர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் குறித்த ஒரு சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவாகவும் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு எதிராகவும் இயங்குவதாகவும், கூட்டணி இளைஞர்கள் பொலிசாரால் தேவையற்ற தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுவதாகவும்சொல்லப்படுகிறது.

இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது:-

16-6-77 வியாழன் மாலை 7 மணியளவில் குருநகர் கடற்கரை வீதியால் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்களை குருநகர் பொலிசார் இருவர் வழிமறித்து 'நீங்கள் எந்தப் பாட்டி' என்றுகேட்டார்களாம். இளைஞர்களிலொருவன் தான் செல்வநாயகத்தின் கட்சி என்று சொன்னதும் பொலிசார் இருவரும் அவனைத் தாக்கத் தொடங்கினராம். இளைஞனும் விட்டுக்கொடுக்காது 'நான் தந்தை செல்வா கட்சி நான் தமிழர்கூட்டணி நான் யோகேஸ்வரன் கட்சி' என்று உரக்கக் கூவினன்.

பொலிசார் அவனை ஒரு மின்சாரக் கம்பத்தின் இருபுறத்திலும் அவனுடைய தலைமயிரை இழுத்துப் பிடித்துக்கொண்டு மிருகத்தனமாக தாக்கவே அவன் மண்டை உடைந்ததாம். இதைக் கண்ணுற்ற இப்பகுதி இளைஞர்களின் பொறுமை எல்லை மீறவே பொலிசார் தாக்குதலை நிறுத்தி ஓட்டம் பிடிக்க வேண்டியதாயிற்று. தாக்கப்பட்ட இளைஞனும் மற்றும் அவனை மீட்டவர்களும்அந்த இடத்தைவிட்டு மறைந்துவிட்டனர். சில நிமிடங்களில் இரு பொலிஸ் ஜீப்

—2-ம் பக்கம் பார்க்க

## லண்டனில் சட்டத்தரணி குமரகுருவும் நான்கு இளைஞர்களும் கைதாகி விடுதலை.

லண்டனில் பொதுநல அரசுகளின் பிரதமர்கள் மாநாடு ஆரம்பமாகிய (8-6-77) நாளன்று, லண்டன் நகரின் மத்தியிலிருக்கும் இலங்கைத்தேயிலை நிலையத்திற்குமுன், இலங்கைத் தமிழர்களினதும், தமிழ் தோட்டத் தொழிலாளர்களினதும் இன்றைய அவல நிலையை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் ஈழவிடுதலை முன்னணி, ஈழம் தமிழர் கழகம், ஆகியவற்றின் பிரதிநிதிகளால் விநியோகிக்கப்பட்டன. இதையடுத்து சட்டத்தரணி அ. குமரகுரு அவர்களும், ஈழம் தமிழர் கழக செயலாளர்கள் திரு. மகேந்திரன், திரு. சேகரம் ஆகியோரும் ஈழவிடுதலை முன்னணி செயலாளர் என். எஸ். கிருஷ்ணன், சித்தார்த்தர் ஆகியோரும் லண்டன் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

பிரிட்டிஷ் மகாராணி எலிசபத் அரசியார் முடிசூட்டிய 25வது ஆண்டு(வெள்ளி) விழா காரணமாகவும், பொதுநல அரசு பிரதமர்கள் மாநாடு காரணமாகவும் இலண்டன் மத்திய பகுதியில் ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், துண்டுப் பிரசுரம் விநியோகித்தல் போன்றவை தடைசெய்யப்பட்டிருந்தன.

இந்தத் தடையை மீறி ஈழவிடுதலை முன்னணியினரும், ஈழத்தமிழர் கழகத்தினரும், தமிழர் பிரச்சினை

—2-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே

# என்ற நக்கீரன் வழியே என் வழி!

## சிங்களவாடியில் கவிஞர் காசி ஆனந்தன் பேச்சு!



''நெற்றிக்கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே என்று கூறிய நக்கீரனின் வழிவந்த தமிழ்க் கவிஞன் நான்! யாராக இருந்தாலும் — நெற்றிக் கண்ணைக் காட்டினுலும் குற்றம் குற்றமே என்பதே எனது கொள்கை!''

—இவ்வாறு மட்டுநகரில் போட்டியிடும் த. வி. கூ. வேட்பாளர்களில் ஒருவரான உணர்ச்சிக் கவிஞர் காசிஆனந்தன், சிங்களவாடியில் 11-6-77ல் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். பல்லாயிரக் கணக்கான மக்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். இ. த. ஆ. சங்கத்தைச் சேர்ந்த திரு. த. குமாரசாமி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. திரு. காசி ஆனந்தன் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

''நான் ஒருகாலத்தில் 'தெய்வம்' என்று சிலரை வர்ணித்ததுண்டு; எனது இதயக் கோவிலிலே வைத்துப் பூஜித்ததும் உண்டு. கொள்கையெனும் கோவிலை விட்டு நகராது அவர்கள் இருந்த காலத்தில், அவர்கள் எனக்கு தெய்வமாகக் காட்சி தந்தனர். ஆனல் என்று அவர்கள் கொள்கையிலிருந்து வழுவிச்செல்ல ஆரம்பித்தனரோ அப்போதே அவர்கள் என் மனதிலிருந்தும் அகன்றுவிட்டனர். நக்கீரன் என்னும் புலவன் சிவபெருமானை தெய்வமாக ஏற்று வணங்கியவன்; ஆனல் சிவன் தவறுவிட்டபோது அதைப் பொறுக்காது சிவனையே எதிர்த்தவன் — நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென்று முழங்கியவன் — அந்த நக்கீரனின் வழிவந்த கவிஞன் நான் — எனவேதான் குற்றங்குறைகளைக் காணும்போது கொதித்து எழுகிறேன்'' என்ருர்.

திரு. கோவை மகேசன் பேசுகையில்—1977 பொதுத் தேர்தலுக்குப்பின்னர் மிகத் தீவிரமான போராட்டங்களில் நாம் ஈடுபடவேண்டிவரலாம்; அப்போது அந்தப் போராட்டங்களில் முன்னணி வகிக்கக்கூடிய இலட்சிய வீரர்கள்—தியாகிகள்—இயக்கத்துக்கு விசுவாசமுள்ளோர் — கூட்டணித் தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்போர் — நமக்குத் தேவை. கவிஞர் காசிஆனந்தன் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்திலே முன்னின்று, மட்டக்களப்பு மாவட்டம் முழுவதையும் மட்டுமல்ல — கிழக்கையே அணிவகுத்து போர்க்களத்துக்கு இட்டுச்செல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர். அதனுல்தான் மூதறிஞர் தந்தை செல்வா அவர்கள் மிகவும் தீர்க்கதரிசனத்துடன் 1975 ஆம் ஆண்டே, காசிஆனந்தனை, தேசிய பேரவைக்கு அடுத்தமுறை தெரிவு செய்வோம் என்று திட்டவட்டமாகச் சொன்னுர். தந்தை செல்வாவின் கட்டளைப்படியே காசிஆனந்தனை தமிழர் விடுதலைக் கூட்டணி இங்கு வேட்பாளராக நிறுத்தியிருக்கிறது. எனவே காசிஆனந்தனின் வெற்றி—தந்தை செல்வாவின் வெற்றி என்ருர்.

திரு. ஈழவேந்தன் பேசுகையில்—தூய்மையும் வாய்மையும், நேர்மையும், துணிவும் தியாகமும் கொண்ட தலைவர்களே நமக்கு வேண்டும். இத்தகைய பண்பாடுகள் நிறைந்த இளந்தலைவராக காசிஆனந்தன் விளங்குகிருர். அவரது வெற்றிக்குப் பின்னர் கிழக்கு மாகாணத்தில் புதிய வேகம் பிறக்கவிருக்கிறது; காசி ஆனந்தனே கிழக்கின் உதய சூரியன்; அவருக்கு வெற்றி தேடிக்கொடுத்தது மட்டக்களப்பு அரசியலில் புத்துணர்வையும் தூய்மையையும் கட்டிவளாக்க வேண்டியது உங்கள் கடமையென்ருர்.

ஆ. ரகுபதிபாலசிறீதரன் பேசுகையில் — அண்ணன் காசிஆனந்தன் தமிழ் இளைஞர்களின் எழுச்சியின் சின்னம்; விடுதலை உணர்வின் படிவம்; தியாகத்தின் மறு உருவம்; உலகெங்கும் காசி ஆனந்தனின் வெற்றியை எதிர்நோக்கியிருக்கிறது. காசிஆனந்தனின் வெற்றி தமிழின எழுச்சியின் வெற்றியென்ருர்.

திருவாளர்கள் செல்வேந்திரன், மரியநேசன், ஆசிரியர் சின்னத்துரை, முன்னள் மாநகர சபை உறுப்பினர்கள் அந்தோனிமுத்து, இரா. அம்பலவாணர், வ. பாலசிங்கம் முழக்கம் முருகப்பா, சிவபாக்கியராசா உட்பட பலர் பேசினர்.

12-6-77ஞாயிற்றுக்கிழமை காலை ஆறுமுகத்தான் குடியிருப்பில் கூட்டணிக் கிளையை கவிஞர் காசிஆனந்தன், ஈழவேந்தன் ஆகியோர் திறந்துவைத்தனர்.

அன்று நண்பகல், பாலைமீன்மடுவில் திரு. அழகையா தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் கவிஞர் காசி ஆனந்தன், கோவை மகேசன், ஈழவேந்தன், இரகுபதி பாலசிறீதரன், சுதர்சன், மரியநேசன், வ. பாலசிங்கம், சிவபாக்கியராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

மாலை ஆரையம்பதி 3ம் குறிச்சியிலும், ஏருவூரிலும் காசிஆனந்தனை ஆதரித்து நடைபெற்ற மாபெரும் கூட்டங்களில் மேற்கண்ட கூட்டணி பிரமுகர்கள் உரை நிகழ்த்தினர்.

---

## இன்றைய கருத்தரங்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை நடாத்தும் வாராந்தக் கருத்தரங்கு இன்று (22-6-77) புதன்கிழமை மாலை 6 மணிக்கு 51, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில், திரு. ஈழவேந்தனின் தலைமையில் நடைபெறும். இக்கருத்தரங்கில்—''தமிழ் நாட்டுத் தேர்தல் முடிவுகள் — ஒரு கண்ணேட்டம்'' எனும் தலைப்பில் சட்டத்தரணி திரு. கரிகாலனும், சட்டப்பட்டதாரி செல்வி மகேஸ்வரி வேலாயுதம் ''விடுதலை போராட்டத்தில் எம்பங்கும் பணியும்'' எனும் தலைப்பிலும் உரையாற்றுவார்கள்.

---

# நயினுமரைக்காரின் அடிமை புத்தி

கடந்த 6ம் திகதி புத்தளம் கச்சேரியில் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்ட வேளையில் ஓர் சுவையான சம்பவம் நடைபெற்றது. இரண்டு சிங்களக் கட்சிகளின் சார்பில் முஸ்லீம் வேட்பாளர் போட்டியிடும் புத்தளம் தேர்தல் தொகுதியில் நியமனப்பத்திரம் தாக்கல் செய்த ஆளைக்கட்சியின் முஸ்லீம் வேட்பாளர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் வேட்புமனு தாக்கல் செய்த முஸ்லீம் வேட்பாளருக்கெதிராக ஓர் ஆட்சேபனை கிளப்பினுர். அதாவது ஸ்ரீ. சு. க. வேட்பாளர் தனது நியமனப் பத்திரத்தை ஆங்கிலத்தில் பூர்த்திசெய்து சமர்ப்பித்தார். ஏதாவது ஒரு வழியில் ஆட்சேபனை கிளப்ப முயன்றுகொண்டிருந்த ஆளைக்கட்சி வேட்பாளருக்கு இது ஒரு பிடியாகப் போய்விட்டது, உடனே அங்கிருந்த அதிகாரியிடம் ஆளைக்கட்சி சார்பில் ஓர் ஆட்சேபனை கொடுக்கப்பட்டது. அதாவது ''ராஜ்ஜ பாஷை'' (சிங்களம்)யில் நியமனப் பத்திரம் நிரப்பப்படவில்லை, எனவே அதை நிராகரியுங்கள்'' என்பதேயாகும்.

தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட ஒரு முஸ்லீம் வேட்பாளர் இன்னெரு முஸ்லீம் வேட்பாளருக்கெதிராக இப்படியான ஒரு வெட்கம் கெட்ட ஆட்சேபனையை கிளப்பியதைக் கேள்வியுற்ற மக்கள் அவர் கச்சேரியை விட்டு வெளியே வந்தபோது ''கூக்காட்டி தங்கள் நச்சரிப்பைதெரிவித்துக்கொண்டனர். அவரது ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டதும், மக்கள் கூக்குரலிட்டதுமான செயல்களைப் பொறுக்கமுடியாத ஆளைக்கட்சி வேட்பாளர் குனிந்த தலை நிமிராமல் நேராக வீட்டுக்கு சென்றுவிட்டார். இவரின் இத்திரச் செயல் பற்றி புத்தளம்வாழ் மக்கள் பெரிதாகப் பேசிக்கொள்கின்றனர்.

முஸ்லீம் ஐக்கிய முன்னணி சார்பில் த.வி.கூ.ஆதரவுடன் போட்டியிடும் துடிப்புள்ள இளம் வேட்பாளரான டாக்டர் இலியாஸ் அவர்கள் தனதுநியமனப்பத்திரத்தை தமிழிலேயே பூர்த்திசெய்து கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது முஸ்லீம், தமிழ் மக்கள்மத்தியில் உயர்வாகப் பேசிக்கொள்ளப்படுகின்றது.

---

# கனகசூரியரின் குட்டு உடைந்தது!

கிளிநொச்சி தொகுதியில் ஐ. தே. கட்சி சார்பில் போட்டியிடும் கனகசூரியர் நீண்டகால இடைவேளையின் பின் கிளிநொச்சிக்கு தரிசனம் தந்தார். தனது காரியாலய முன்றலில் நடந்த கருத்தரங்கில் முற்றுமுழுதான பொய்ப் பிரச்சாரங்களை முன்வைத்து பேசியபோது கொதிப்படைந்த இளைஞர்கள் குறுக்கிட்டனர். ''தமிழ்த் தலைவர்கள் மூவர் ஜே. ஆரிடம் வந்து மூன்று கோரிக்கைகளை நிறைவேற்றினுல் தாம் அடுத்த தேர்தலின்பின் ஐ.தே.க.வை ஆதரிப்பதாக கூறினுர்களாம். கிளிநொச்சியில் ஐ. தே. க. போட்டியிடக்கூடாது என்றும், மூவருக்கு மந்திரிப் பதவி தரவேண்டும் என்றும், அந்த மூவரும் தமிழரசு கட்சியினராகவே இருக்கவேண்டும் என்றும்கேட்டுக் காண்டார்களாம் ஜே. ஆர். ''குறித்த மூவருக்கும் தருவதாக உறுதிகூறமுடியாது'' என்று சொன்னதால் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டு சென்றுவிட்டனர் என்று கனகசூரியர் சொன்னதும் கூட்டணி இளைஞர்கள் அவரை அணுகி ஜே. ஆரின் கைப்பட ஒரு அறிக்கையை வெளியிட்டு தங்கள் கூற்றைஉறுதிப்படுத்தவேண்டும் என்றனர்.

அரசியலில் பல தந்திரங்கள் கையாளப்படும் என கூறிஅவர் சமாளிக்கமுயன்ற போது இளைஞர்கள் போக்கிலித்தன அரசியல்வாதிகளை ஏற்றுக்கொள்ள முடியாது நிரூபித்தே ஆகவேண்டுமென்றனர். நியமன தாக்கலை அடுத்து 9ம் திகதி ஜே. ஆரிடம் சென்று அவர் கைப்பட அறிக்கை வெளியிடுவேன் என்று கூறி சமாதானம் செய்தார் ஏழாம் திகதி வந்துபோய்விட்டது. கனகசூரியன்ரி புழுகும் உடைந்துவிட்டது!

---

## உடுப்பிட்டியில் மகளிர் பேரவை

உடுப்பிட்டித் தொகுதியில் திரு. இராசலிங்கத்தின் வெற்றிக்காக தமிழ் மகளிர் பேரவையினர் சுறுசுறுப்புடன் உழைத்துவருகின்றனர். வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்துவருகின்றனர். 13-4-77ல்உடுப்பிட்டி தொகுதியின் தமிழ் மகளிர் பேரவைக்கிளை நெல்லியடியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் தொடங்கிவைக்கப்பட்டது. நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில திரு. வ. ந. நவரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், செல்வி கலைநிதிதேவா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

அதே நாளில் பருத்தித்துறைதொகுதியைச்சேர்ந்த அல்வாயிலும் மகளிர் பேரவைக்கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அக்கூட்டத்திலும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், செல்வி கலைநிதிதேவா ஆகியோர் உரையாற்றினர்.

---

## கூட்டணி இளை...

—1-ம் பக்கத தொடர்

வண்டிகள் அசுர வேகத்தில் வந்து அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. ஆனல் யாரும் அகப்படவில்லை. இப்பகுதியில் எந்நேரமும் உளவுவேலை பார்க்கும இரு பாண் பேக்கரிச் சொந்தக்காரர்கள் பொலிசாரிடம் ரகசியமாக ஏதோ சொன்னுர்கள்.

17-6-77 காலை 11மணியளவில் பொலிசார் ஜீப்பில் வந்து ஒரு தேநீர்க் கடையில் நின்ற 3 இளைஞர்களை ஜீப்பில் ஏற்றிச்சென்று பொலிஸ் நிலையத்தில் வைத்து மிருகத்தனமாகத் தாக்கிவிட்டு (ஒரு இளைஞனுக்கு மண்டை உடைந்துவிட்டதாம்) அடைத்துவைத்துள்ளார்கள். இதுபற்றி திரு. யோகேஸ்வரனிடம தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்செய்தி அச்சுக்குபோகும் போது அந்த இளைஞர்கள் பொலிஸ் நிலையத்தில் தான் அடைக்கப் பட்டுள்ளார்கள். இப்பகுதி மக்கள், குறிப்பாக இளைஞர்கள், இதனுல் மிகவும் கொதிப்படைந்துள்ளனர்.

---

## லண்டனில்...

—1-ம பக்கத்தொடர்

பற்றிய துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்கள். அப்போதே அவர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் சிறிது நேரத்தில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இலங்கைப் பிரதமர் பொது நலவரசுப் பிரதமர்கள் மாநாட்டுக்கு லண்டன் வருவாராஞல் அவருக்கு கறுப்புக் கொடி காட்டவும் ஆர்ப்பாட்டம் நடத்தவும் மேற்படி இயக்கங்கள் திட்டமிட்டிருந்தன. பிரதமர் அங்கு செல்லாததால் மேற்படி ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

—(லண்டனில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் தமிழாக்கம் 26-6-77 சுதந்திரனில் வெளிவரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சாஞ, சாவன்ஞ, சேயன்ஞ'- இந்த மூன்றிலும் மயங்கிவிடாதீர்!

## உடப்பில் திருமதி மங்கையர்க்கரசி பேச்சு!

'பதின் மூன்றாம் நூற்றாண்டில் புத்தளப்பகுதியை ஆண்டவன் செகராஜ சேகரன் என்றும் ஓர் தமிழ்மகன். தமிழன் ஆண்ட இப்பூமி இன்று சிங்கள இனத்தினரால் குடியேற்றப்பட்ட சிங்கள பிரதேசமாகக் கணிக்கப்படுகின்றது. வடக்கு—கிழக்கிலும், வடமேற்கிலும் தமிழர்கள் பூர்வீகக் குடிகளாக இருந்தார்கள் என்பதை ஆதாரபூர்வமாக நீதிமன்றத்தில் விளக்கியவர் அமரர் திருச்செல்வம். தமிழன் ஆண்ட பூர்வீகத் தமிழ் மண் குடியேற்றத்திட்டமென்ற போர்வையில் சிங்கள அரசாங்கத்தின் உடந்தையுடன் ஆக்கிரமிக்கப்படுகின்றது. இந்த நிலையிலிருந்து தமிழ் பேசும் மக்கள் தப்பிப்பிழைக்கவேண்டுமானால், அவர்கள் தம்மைத் தாமே ஆளவேண்டும்''

உடப்புக் கிராமத்தில் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணி பிரசாரக் கூட்டத்தில்பேசிய கூட்டணி செயலதிபர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புத்தளம் தொகுதியில் போட்டியிடும் தமிழர் விடுதலைக்கூட்டணி வேட்பாளர் டாக்டர் இல்யாஸ் அவர்களை ஆதரித்துப் பிரசாரம் செய்வதற்காக கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம், தமிழ் மகளிர்பேரவை பொதுச்செயலாளர் திருமதி மங்கை அமிர்தலிங்கம் தமிழ் இளைஞர்பேரவை பிரமுகர் பொன். சத்தியசீலன் ஆகியோருர், புத்தளம தொகுதியில் யூன் 10, 11ம் திகதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். யூன் 10ம் திகதி புத்தளம் நகரத்தில் கரைத்தீவில் பல்லாயிரக் கணக்கான முஸ்லிம்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் தலைவர்கள் உரையாற்றினர் யூன் 11ம் திகதி உடப்பு, ஆண்டிமுனை, ஏத்தாலை, கல்பிட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களில் இவர்கள் கலந்துகொண்டு கொள்கை விளக்கமளித்தனர்.

உடப்பு கிராமத்தில் வாழும் தமிழ் மக்கள் நாவலர் அமிர்தலிங்கத்துக்கும், திருமதி அமிர்தலிங்கத்துக்கும் உணர்ச்சியும் பாசமும் நிறைந்த வரவேற்பைஅளித்தனர். திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களை உடப்பு வாழ்பெண்கள் முத்தமிட்டு தங்கள் பாசத்தை கொட்டி வரவேற்றனர்.

உடப்பு பிரசாரக் கூட்டங்கள் 11-6-77 காலையிலிருந்து மாலைவரை நடைபெற்றன.

உடப்பில் கூட்டணிக் கிளையைத் திறந்து வைத்த பின் மேளதாள வாத்தியங்களுடன் திரௌபதையம்மன் ஆலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசேட பூசையில் கலந்து கொண்டார்.

பின்பு ஆலய முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் சி. பூவடப்பன் தலைமை வகித்தார்.

அமரர் தந்தை செல்வாவின் மௌன அஞ்சலியுடனும் இரா. முருகேசன் தேவாரத்தோடும் இக் கூட்டம் ஆரம்பமானது. தொடர்ந்து அமிர் பேசுகையில்:-

''1976ம் ஆண்டு புத்தளத்தில் தமிழ்பேசும் முஸ்லிம் சகோதரர்கள் பள்ளி வாசவாசலில் பொலிஸ் வெறியர்களால் சுடுபட்டபோது முதன் முதலாக குரல் எழுப்பியவர் தந்தை செல்வா. எங்கெங்கு தமிழர்களுக்கு இன்னல்கள் இடுக்கண்கள் ஏற்படும்போது தட்டிகேட்டு குரல்கொடுக்கும் இயக்கம் என்றால் அது தமிழர் விடுதலைக் கூட்டணியாகும் உலகத்தில் 6கோடித் தமிழர்கள் பரந்து வாழ்கின்றார்கள். ஆனாலும் தமிழர்களுக்கென்று ஓர் நாடுஇல்லை ஈழத்தில் தனிநாடு அமைக்க உணர்ச்சியுள்ள தமிழ் இளைஞர் அகிம்சா முறையில் போராட முன்வந்திருக்கின்றார் என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி பேசுகையில் கூறியதாவது:

'நான் உடப்பில் வதியும் தமிழ்த் தாய்களை பார்க்கும் போது உண்மையான தமிழர்களாக அப்பழுக்கற்ற சைவர்களாக — வீரத்தமிழர்களாக வாழ்கின்றார்கள் என்பதையிட்டு புளங்காகிதமடைகின்றேன். இக் கிராமத்தில் வாழும் 8000 தமிழர்களும் இலங்கையில் எப்பகுதிகளிலும் காணமுடியாத பாரம்பரியம், தமிழர்கோட்பாடுகளுக்கமைய வாழ்கின்றீர்கள்.

தேர்தல் அண்மித்துள்ள இவ்வேளையில் சாஞ, சாவன்ஞ, சேயன்ஞ என்ற மூன்று பொருட்களைக் கொண்டு சிங்களக்கட்சிகள் வாங்குப் பிச்சைக்கேட்டு வருவார்கள். சல்லி சாராயம் சேலை இந்த மூன்று பொருள்களில் விழிப்பாக இருக்க வேண்டும்''



இக்கூட்டத்தில் புத்தளம் த. வி. கூ. அமைப்பாளர் ஏ. இல்யாஸ், கிராம சபைத் தலைவர் பூ. கந்தசாமி ஜே. பி. முன்னாள் கிராம சபைத் தலைவர் ந. சிற்றம்பலம் ஜே. பி. தமிழ்இளைஞர் பேரவைத் தலைவர், சத்திய சீலன். ஐயாத்துரை, மற்றும் பலரும் பேசினார்கள்.

தகவல்
வீர அலைமுகிலன்

---

## 'டாஸ்' நிருபருக்கு 'அமிர்' செவ்வி!

சோவியத் செய்தி ஸ்தாபனமான 'டாஸ்' நிறுவனத்தின் பிரதிநிதிக்கு தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் அ. அமிர்தலிங்கம், கடந்த 17-6-77 வெள்ளிக்கிழமை மாலை கொழும்பிலுள்ள ஹோட்டல் தப்ரபேனில் வைத்து ஒரு சிறப்பு செவ்வியை அளித்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் பற்றியும், அதன் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் திரு. அமிர்தலிங்கம் தனது முப்பது நிமிட செவ்வியில் எடுத்துரைத்தார்.

---

## பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவிப்பு!

பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு இலங்கையில் எம். ஏ. எஸ். அபு அல் அடல் என்ற ஒரேயொரு பிரதிநிதி தவிர வேறு பிரதிநிதிகள் யாரும் இல்லையென்றும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சார்பில் பேசுவதற்கும் அறிக்கை விடுதற்கும் வேறுயாருக்கும் அதிகாரமில்லையென்றும் கொழும்பிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கம் அறிவிக்கிறது.

---

## மகளிர் பிரார்த்தனை

தமிழ் மகளிர் பேரவையின் கொழும்புக்கிளை நடாத்தும் வாராந்தப் பிரார்த்தனை 24-6-77 வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்கு வெள்ளவத்தை மாணிக்க லிங்கப்பிள்ளையார் கோவிலில் நடைபெறும்.

---

## நடராசாவின் பெருந்தன்மை!

புத்தளம் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடவிருந்த திரு. சி. நடராசா அவர்கள் பெருமனத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் டாக்டர் இல்யாஸ் அவர்களுக்காக கடைசி நேரத்தில் விட்டுக்கொடுத்ததை புத்தளம் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள். புத்தளம் பகுதியில் நல்ல செல்வாக்கு மிக்கவரான திரு. சி. நடராசா, டாக்டர் இல்யாசின் வெற்றிக்காக இப்போது உழைத்து வருகிறார். தமிழுணர்ச்சி மிக்க நடராசாவின் பண்பாடு, புத்தளம் மக்களிடையே பெரும் பாராட்டைபெற்றுள்ளது.

---

## தொண்டமானுக்கு தமிழ் ஆசிரியர்கள் ஆதரவு!



15-6-77ல் நுவரெலியாவில் நடைபெற்ற இலங்கை தமிழ் ஆசிரிய சங்க கூட்டத்தில் இ. தொ. க. தலைவரும், நுவரெலியா தொகுதியின் கூட்டணி வேட்பாளருமான திரு. சௌ. தொண்டமான் அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்கள்

திரு. தொண்டமானை வரவேற்று உரை நிகழ்த்திய வரவேற்பு செயலாளர் திரு. த. மகாசிவம் தனது உரையில் ''இதுவரை காலமும் எமது சங்கம் அரசியல் கலப்பற்றதாக இருந்த பொழுதிலும் தற்போது தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள நிலையில் த. வி. கூ. ஆதரவு கொடுத்து இனவிடுதலை அடைய உழைக்கவேண்டும் என்று தீர்மானித்துள்ளதால் த. வி. கூ. தலைவர் என்ற ரீதியிலும், தொழிற் சங்கவாதி என்ற ரீதியிலும் திரு. தொண்டமான் அவர்களுக்கு எதிர்வரும் தேர்தலில் தீவிரமாக பிரசாரம் செய்து ஆதரவுதேட உறுதி பூண்டுள்ளது'' என தெரிவித்தார்.

திரு. தொண்டமான்உரை நிகழ்த்தியபோது ஆதரவு அளிப்பதற்கு நன்றி தெரிவித்ததோடு 'இனரீதியான பிரச்சினைகளை சர்வதேச தொழிற் சங்கங்கள் மூலம் சர்வதேச ஸ்தாபனங்களுக்கு எடுத்துரைக்க இ. தொ. கா. உதவி புரியும், மேலும் வெளிநாட்டு ஆசிரியர் சங்கங்களின் உதவியுடன் இங்குள்ள ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் நடத்த தாம் ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

---

## பட்டிருப்பு தொகுதி த. இ. பேரவை எழுச்சி மாநாடு!


பட்டிருப்பு தொகுதி த இளைஞர் பேரவையின் எழுச்சி மாநாடு யூலை 1, 2ம திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை பட்டிருப்பு தொகுதி தமிழ் இளைஞர் பேரவையினர் சுறுசுறுப்புடன் கவனித்து வருகின்றனர்.

---

உடுப்பிட்டி தொகுதி தேர்தல் பிரசாரம்

## சமூக முன்னேற்ற மன்றம் வேண்டுகோள்!

உடுப்பிட்டித் தொகுதியில் த. வி. கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. த. இராசலிங்கம் அவர்களின் வெற்றிக்காக பிரச்சாரம் செய்யவும் உழைப்பை நல்கவும் சமூக முன்னேற்ற மன்றம் தீர்மானித்து[illegible] மன்றத்தின் சார்பில் [illegible] சாரக்குழு ஒன்று இம்மாத இறுதியில் உடுப்பிட்டித் தொகுதிக்கு செல்லவிருக்கிறது. இப்பிரசார குழுவில் பங்குபெறவும், ஆலோசனை தரவும் விரும்புவோர், க. பொன்னுத்துரை, 9, காள்வில் இடம், கொள்ளுப்பிட்டி என்ற முகவரிக்கு 25-6-77க்கு முன்பு தொடர்பு [illegible] மன்றம் கோருகிறது.



மறைந்த தமிழ்த் தலைவர்கள் ஜீ. ஜீ. திருச்செல்வம் தந்தை செல்வா ஆகியோருக்கு அஞ்சலிதெரிவித்து பதுளை தமிழ் இலக்கிய வட்டத்தினர் அண்மையில் பதுளை சரஸ்வதி கனிஷ்டவித்தியாலயத்தில் ஓர் கூட்டத்தை நடத்தினர். இக்கூட்டத்தை பதுளை மொடேர்ன் படமாளிகை உரிமையாளர் திரு. கே. எஸ். இரத்தினசாமி குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

# வெளிநாடுகளின் உதவி....

—1-ம் பக்கத் தொடர்

பணியை மறைந்த தலைவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து செய்ய உறுதி பூண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

திரு அமிர்தலிங்கம் தமது உரையில் — 1947ம் ஆண்டு முதல் இன்றுவரை மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் தமிழினத்துக்கு இழைத்த கொடுமைகளை சாங்கோபாங்கமாக விளக்கினார். புதிய குடியரசு அரசியலமைப்பில் தமிழினத்தின் உரிமைகள் முழுவதும் பறிக்கப்பட்டுள்ள தன்மையை எடுத்து விளக்கினார். தனிநாடு கோருகின்ற நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்ட சூழ்நிலையை எடுத்து விபரித்தார். அவர் அங்கு தெரிவித்த சில கருத்துக்கள் வருமாறு:—

## இன்றைய இலங்கை—போலி அமைப்பு

"இன்றைய 'இலங்கை' என்பது 1833ம் ஆண்டு ஏற்பட்ட ஓர் போலி அமைப்பே தவிர-அதற்குமுன்னால் தமிழ் ஈழம் தனியாகவும், சிங்கள நாடு தனியாகவுமே பரிபாலிக்கப்பட்டு வந்தது. தமிழ்ஈழத்தையும், சிங்கள நாட்டையும் கைப்பற்றிய அந்நியர்கள்கூட 1833வரை இரு நாடுகளையும் தனித்தனியாகவே ஆண்டுவந்தார்கள். 1833ம் ஆண்டு தங்கள் நிர்வாக வசதிக்காகவே இரு நாடுகளையும் இரு நாடுகளின் சம்மதமின்றி ஒரே நாடாக, இணைத்தார்கள். இந்த இணைப்பை அறுத்து. தமிழ்ஈழத்தை மீள அமைப்பதே நமது இலட்சியம்.

1972ம் ஆண்டு மே 22ம் நாள் கொண்டுவரப்பட்ட குடியரசு அரசியல் சட்டம் தமிழ் தேசிய இனத்தின் சம்மதமின்றி, ஒருதலைப் பட்சமாக நிறைவேற்றப்பட்ட சட்டம். இச்சட்டத்தை தமிழினம் முற்றாக நிராகரித்துவிட்டது. தமிழினத்தை ஆள்வதற்கு சிங்களவர்களுக்கு எதுவித அதிகாரமும் கிடையாது; அவர்கள் எம்மைப் போரில் கைப்பற்றியதில்லை; அல்லது எமது இணக்கத்தைப் பெற்றதுமில்லை!

## தமிழ்ஈழத்தின் அரசியலமைப்பு உருவாக்குவோம்

"1970ம் ஆண்டு பொதுத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சிங்கள நாட்டுக்கு புதிய அரசியல் சட்டம் ஒன்றை எழுதுவதற்கு சிங்களவர்களிடமிருந்து எப்படி அனுமதிபெற்றதோ—அதேபோல தமிழ்ஈழத்துக்குரிய அரசியலமைப்பை தயாரிப்பதற்கு தமிழ்ஈழ மக்களின் அனுமதியை எதிர் வரும் பொதுத்தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணி கோரி நிற்கிறது. தமிழ்ஈழ மக்களின் அனுமதி கிடைத்தவுடன், பொதுத் தேர்தலையடுத்து, தமிழ்ஈழத்துக்கான அரசியல் அமைப்பை தயாரிக்க தமிழ் தேசிய சபையொன்றை நிறுவவிருக்கிறோம்" என்றார் அமிர்தலிங்கம்.

"கூட்டணி முன்பு சமர்ப்பித்திருந்த ஆறு அம்சக் கோரிக்கையை எதிர்காலத்தில் எந்த ஒரு அரசாங்கமாவது வழங்கமுன்வந்தால், தனிநாடு கோரிக்கையை கூட்டணி கைவிடுமா என்று ஒரு நிருபர் கேட்டபோது—"தனிநாடு இலட்சியம் மாற்றவோ, கைவிடப்படவோ முடியாத முடிந்த முடிபு; ஆறு அம்சக் கோரிக்கை பற்றி எதிர்காலத்தில் நாம் நினைத்தும்பார்ப்பதற்கில்லை; காங்கேசன்துறை இடைத் தேர்தலுடன் ஆறு அம்சக் கோரிக்கையை கைகழுவி விட்டுவிட்டோம். இப்போது நாம் நாடி நிற்பது நமது சுதந்திரம் ஒன்றே" என்று திரு. அமிர்தலிங்கம் பதிலளித்தார்.

## கூட்டு சேர மாட்டோம்

ஏதாவது சிங்களக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கம் அமைப்பீர்களா என்று ஒரு நிருபர் கேட்டபோது திரு. அமிர்தலிங்கம் கூறியதாவது:—

"சிங்களக்கட்சிகளுடன், தமிழர் விடுதலைக் கூட்டணி கூட்டுச்சேருவது என்ற பேச்சுக்கே இடமில்லை. கடந்த காலத்தில் கூட்டுச்சேர்ந்து, ஒப்பந்தங்கள் எழுதி பட்ட அனுபவங்கள் இன்னும் நம் நெஞ்சில் பசுமையாக இருக்கின்றன. எந்தச் சிங்களக் கட்சியுடனும் அரசு அமைப்பதற்கு நாம் கூட்டுச்சேர மாட்டோம். அதேவேளையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கு எந்த ஒரு சிங்கள அரசாவது தானாக முன்வருமானால், நாம் அதற்கு குறுக்கே நிற்கவும் மாட்டோம. வரலாற்றுப்படியும், தேசிய இனம் என்பதற்கு லெனின் கூறிய வரைவிலக்கணப் படியும், நாம் ஒரு தனித்தேசிய இனம்; எம்மை நாமே ஆள்வதே எமது குறிக்கோள். அந்த இலட்சியத்திலேயே நாம் கண்ணும் கருத்துமாக இருப்போம."

ஏன் மிஸ்டர் அமிர்தலிங்கம், சிங்கள மக்களுடன் நீங்கள் இரண்டறக் கலந்தாலென்ன? என்று ஒரு(சிங்கள) நிருபர் கேட்டபோது திரு. அமிர்தலிங்கம் பின்வருமாறு கூறினார்.

"ஒவ்வொரு சிங்களவன் நெஞ்சிலும் இதே கேள்விதான் இருக்கிறது. நாம் சிங்கள இனத்துடன் இரண்டறக் கலந்து, நமது தனித்துவத்தை இழக்கவேண்டுமென்று சிங்களவர்கள் எதிர் பார்க்கிறார்கள். நாங்கள் எங்கள் தனித்துவத்தை இழக்க மறுக்கிறோம் — அதனால்தான் தனிநாடு கோரி நிற்கிறோம். கடந்த காலத்தில் தெற்கில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை இழந்த போதிலும் — வடக்கு, கிழக்கில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் தனித்துவத்தை இழக்காமல் தமிழர்களாக வாழ்ந்ததற்கு காரணம் — அவர்களுக்கென்று தனியாட்சியொன்று இருந்ததுதான்! நாம் இன்று தனியாட்சி கோருவதும் இதற்காகத்தான்!"

திருகோணமலைத் துறைமுகம்பற்றிக் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு அமிர் பதிலளிக்கையில் — திருகோணமலைத் துறைமுகம், தமிழ்ஈழ நாட்டின் துறைமுகமாக விளங்கும். அதை எந்த ஒரு வல்லரசுக்கும் கையளிக்க மாட்டோம்!" என்றார்.

"வல்லரசுத் தலையீடுகளின்றி, சமாதானமாக எங்கள் தமிழ்ஈழத்தை நிறுவவே நாம் முயற்சிக்கிறோம். சிங்கள இனம் ஒத்துழைத்தால் இது சாத்தியமாகும். இது சாத்தியமாகாத பட்சத்தில், வெளிநாடுகளின் உதவியைப் பெற்றாவது— சுதந்திரத் தமிழ்ஈழத்தை நாம் நிறுவியே தீருவோம். இரத்தம் சிந்தியும் சுதந்திரம் பெறுவதற்கு எமது இளைஞர்கள் தயாராகவே இருக்கிறார்கள்!" என்றார் அமிர்தலிங்கம்.

## தமிழ்ஈழத்தின் எல்லைகள்

உத்தேச தமிழ்ஈழத்தின் எல்லைகள் எவை என்ற கேள்விக்கு திரு. அமிர்தலிங்கம் பதிலளிக்கையில்—தமிழ் ஈழத்தின் எல்லைகள் எமது சக்தியிலும் எமது நிலத்தை பாதுகாக்கும் வல்லமையிலுமே பெரிதும் தங்கியிருக்கிறது. இருந்த போதிலும், புத்தளத்தையுள்ளடக்கிய இன்றைய வடக்கு, கிழக்கு மாகாணங்களையே தமிழ்ஈழமாக நாம் கருதுகிறோம் என்றார்.

---

# உடுப்பிட்டி தொகுதி மக்களுக்கு இராசலிங்கம் தரும் வாக்குறுதி!

"நான் ஒரு தமிழன்; தமிழால் வாழ்பவன் 'தமிழே என்பேச்சும் மூச்சும்' இந்த நாட்டில் தமிழன் தன்னை ஒரு சுதந்திர புருஷனாக மாற்றி தமிழ் ஈழத்தில் பூரண சுதந்திரத்துடன் தன்னாதிக்கம் கொண்டு வாழும்வரை எமது இயக்கத்தின் போராட்டம ஓயாது; ஒழியாது. அத்தகைய தீவிரப் போரட்டங்களில் கலந்து கொண்டு இயக்கக் கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு நடப்பேன். என்மீது அன்பும் நம்பிக்கையும்கொண்டுள்ள உடுப்பிட்டி தொகுதி மக்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எக்காலத்திலும் துரோகம் செய்யமாட்டேன். அவர்கள் என்னைத்தேடி வருவதற்கு இடம் வைக்காமல் கிராமம் கிராமமாக நானே அவர்களைத்தேடிச் சென்று சந்தித்து என்னால் இயன்ற உதவிகளைச்செய்து என் தொண்டினைச்செய்வேன்!"

—உடுப்பிட்டி தொகுதி த. வி. கூ. வேட்பாளர் திரு. த. இராசலிங்கம்

---

# "யாழ்ப்பாணத்தில் யோகேஸ் வெற்றியை உலகமே எதிர்பார்த்திருக்கிறது'

## லண்டன் பிரமுகர் வீரசிங்கம் பேச்சு



யாழ்ப்பாணத் தொகுதி த. வி. கூ. வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரனை வெற்றி பெறச்செய்வது யாழ் தொகுதி வாக்காளரின் தலையாய கடமை என்று லண்டன் தமிழ் ஈழ விடுதலை முன்னணி அமைப்பாளர் திரு. எஸ். வீரசிங்கம் இனகாவின் தோட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது வேண்டிக்கொண்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

திரு. யோகேஸ்வரன் இனிமையும் எளிமையுமுள்ள இளைஞர் சட்டத்தரணி புகழ்பெற்ற குடும்பத்தில் பிறந்தவர். அவர் லண்டனில் இருந்தபோது ஈழத் தமிழ் மக்களின் சிங்கள எதிர்ப்புப் போராட்டங்களின்போது அங்கேயே எதிர்ப்புத் தெரிவிக்க அணி திரட்டினார்.

பார்ப்பதற்குஎளிமையான அவர், போராட்டமென்றால் தமிழ் உரிமைப்போரென்றால் வீரனாகத் விளங்குவதில் வல்லவர் யாழ் தொகுதி இம்முறை இந் நல்லவரை தனது தொகுதிப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்ய இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

"த. வி. கூட்டணி 24வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இவர்கள் வெற்றியீட்டுவதை உலகிலுள்ள 6 1/2 கோடி தமிழ் மக்களும் எதிர்பார்த்திருக்கிறார்கள். தமிழர் தலைநகரான யாழ்ப்பாண வெற்றி குறித்து உலகத் தமிழர் மகிழும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

"தந்தை செல்வா உலகத் தலைவர்களுள் ஒருவர். அவர் கனவுகண்ட தமிழீழம் மலர ஈழம்வாழ் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் த.வி.கூ. வேட்பாளர்கள் 24 பேரையும் வெற்றிபெறச் செய்ய வேண்டும்.

த. வி. கூட்டணி ஒரு விடுதலை இயக்கம். தேர்தலின் பின்தான் அது தீவிரமாகச் செயல்படவேண்டும். ஜூலை 21 தேர்தலில் த. வி. கூ. பெறும் வெற்றியை உலகத் தமிழ்மக்கள் உன்னிப்பாகக் கவனித்து வருவதால் இத தேர்தல் மிகவும் முக்கியமானது. உங்கள் ஆர்வத்தையும் உணர்வையும் நான் லண்டன் சென்று அங்குள்ள மக்களுக்கு நிச்சயம் சொல்வேன்" என்று பேசி முடித்தார்.

கூட்டத்தில் பேசிய செல்வி அங்கயற்கண்ணி, தேர்தலென்றதும் தமிழ் பெண்கள் பதுங்கியிருந்த காலம் மலையேறிவிட்டதென்றும், தமிழுரிமைப் போரில் இன்று தமிழ் மாதரும் முன்னின்று உழைத்து வருவதாகவும் தமிழ்ஈழத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றிபெற மாதாகள் இத்தேர்தலில் முன்னின்றுழைக்க வேண்டுமென்றும், அச்சமற்ற வாழ்வு, தமிழீழம் கண்டாலே ஏறபடும் என்றும், சுயஇச்சை வேட்பாளர்களுக்கு மக்கள் வாக்களிப்பதைவிட்டு த.வி. கூட்டணி வேட்பாளர்களுக்கே இத்தேர்தலில் உங்கள் பொன்னான வாக்குகளைப் போட்டு வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

—அப்பலோ

நீம் வாசனை சோப்

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப்பை வாங்கி உபயோகியுங்கள். உங்கள் சரும பாதுகாப்புக்கு சிறந்தது

ஒரு மில்க்வைற் தயாரிப்பு

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு-12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1977ம் வருடம் ஜூன் மாதம் 22ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org